இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 11-12-2023

மோசடித்தனம்

பா.ஜ.க. ஜனநாயகப் படுகொலையை பட்டவர்த்தனமாக நடத்தும் என்பதற்கு நேற்றைய உதாரணம் மஹுவா மொய்த்ரா! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை ஒரு கேலிக்கூத்து விசாரணைக் கமிஷன் மூலமாக வீழ்த்தி இருக்கிறது பா.ஜ.க. ஆட்சி. இது தான் ராகுல் காந்திக்கும் நடந்தது. மஹுவாவுக்கும் நடந்திருக்கிறது.

ராகுல் காந்தி விவகாரத்தில் என்ன நடந்தது? 'மோடி' என்ற வார்த்தைக்கு தவறான அர்த்தம் சொன்னாராம். 16.04. 2019 அன்று ராகுல் காந்திக்கு எதிராக குஜராத் முன்னாள் அமைச்சரும் பா.ஜ.க. எம்.எல்.ஏ.-வுமான புர்னேஷ் மோடி என்பவர் சூரத் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்தார். 24.06.2021 அன்று இந்த வழக்கு விசாரணையில் சூரத் நீதிமன்றத்தில் ராகுல் காந்தி ஆஜர் ஆனார். இதன் முக்கிய திருப்பு முனையாக 07.03.2022 அன்று வழக்கு தொடுத்த நபரே, வழக்கு விசாரணைக்கு தடை வாங்கினார். ஓராண்டு காலம் அதனைப் பற்றி எந்தப் பேச்சும் இல்லை.

07.02.2023 அன்று அதானியும் பிரதமர் மோடியும் இருக்கும் புகைப்படத்தைக் காட்டி நாடாளுமன்றத்தில் ராகுல் கடுமையாக விமர்சித்தார். முன்பு வழக்கு போட்டவர் 16.2.2023 அன்று திடீரென்று குஜராத் உயர்நீதிமன்றம் சென்று, தான் பெற்ற தடை உத்தரவை திரும்பப் பெறுகிறார். இதையடுத்து, 17.03.2023-ல் வாதங்களைத் தொடர சூரத் மாவட்ட நீதிபதி அனுமதிக்கிறார். ஐந்தே நாளில் அதாவது 23 ஆம் தேதியே தீர்ப்பு வருகிறது, ராகுலுக்கு 2 ஆண்டு சிறை விதிக்கப்படுகிறது. அதற்காகவே காத்திருந்தது போல, மறு நாளே - 24 ஆம் தேதி அன்று அவரது எம்.பி. பதவி பறிக்கப்படுகிறது. உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால் மீண்டும் நாடாளுமன்றத்துக்குள் வந்துவிட்டார் ராகுல்.

ராகுல் பதவியைப் பறிக்க நடத்திய அவசர மோசடித் தனமே மஹுவா விவகாரத்திலும் நடந்துள்ளது. அதானியின் ரூ.13 ஆயிரம் கோடி முறைகேடு தொடர்பாக நாடாளுமன்றத்தில் தொடர்ந்து கேள்வி கேட்டவர் திரிணாமூல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரான மஹுவா மொய்த்ரா. ஆவேசமாகவும் ஆக்ரோஷமாகவும் தனது வாதங்களை வைக்கக் கூடியவர் அவர். இதற்கு நாடாளுமன்றத்தில் பா.ஜ.க.வால் பதில் அளிக்க முடியவில்லை. அவரது உரை சமூக வலைத்தளங்களில் அதிகமாக பரவியது. ஒவ்வொரு பிரச்சினையின் போதும் தனது டுவிட்டரில் பா.ஜ.க.வையும் ஒன்றிய அரசையும், பிரதமர் மோடியையும் வறுத்தெடுப்பதை வழக்கமாக வைத்திருந்தார் மஹுவா. எனவே இவரை முடக்க முடிவெடுத்தார்கள்.

'அதானிக்கு எதிராக கேள்வி எழுப்ப தொழில் அதிபர் ஹிரா நந்தானியிடம் இருந்து 2 கோடி ரூபாய் மஹுவா லஞ்சமாகப் பெற்றார்' என்று குற்றம் சாட்டினார்கள். இந்த ரகசியத்தை அம்பலப்படுத்தியதாக ஜெய் ஆனந்த் தேஹத்ராய் என்பவரைக் குறிப்பிட்டார்கள். இந்த ஜெய் ஆனந்த் என்பவர் மஹுவாவின் முன்னாள் காதலராம். எப்படி ஆள் பிடிக்கிறார்கள் பார்த்தீர்களா? கேவலமான இழிவழி அல்லவா இது? இருவரின் தனிப்பட்ட விவகாரத்தை தங்களது சுயநலத்துக்காக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதனை நாடாளுமன்ற சபாநாயகர் ஓம்பிர்லாவிடம் புகாராகத் தருகிறார் பா.ஜ.க. எம்.பி.யான நிஷிகாந்த் துபே. இதனை நாடாளுமன்ற நெறிமுறை குழு விசாரணை நடத்துகிறது. இந்தக் குழு என்ன செய்திருக்க வேண்டும்? இந்தக் குழு மஹுவாவை விசாரித்தது. விசாரணையின் பாதியில் மஹுவா வெளியேறினார். தன்னை அநாகரிகமான கேள்விகளால் அசிங்கப்படுத்தினார்கள் என்று சொல்லி விட்டு மஹுவா வெளியேறினார்.

மஹுவாவுக்கு பணம் கொடுத்ததாகச் சொல்லப்படும் ஹிரா நந்தானியை நேரில் அழைத்து விசாரித்தார்களா? விசாரிக்கவில்லை. மஹுவா பணம் வாங்கியதாகக் குற்றம் சாட்டிய ஜெய் ஆனந்தை நேரில் அழைத்து விசாரித்தார்களா? விசாரிக்கவில்லை. மஹுவா பணம் வாங்கினார் என்பதற்கான ஆதாரம் காட்டப்பட்டதா? இல்லை. இதுதான் பா.ஜ.க.வின் நீதிபரிபாலன முறை. இதுதான் மோடி கோர்ட். மோசடித்தனத்தின் உச்சம் இதுதான்.

"விசாரணைக்கு வர நான் தயார். ஆனால் ஹிரா நந்தானி, ஜெய் ஆனந்த் ஆகிய இருவரையும் நான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும்" என்றார் மஹுவா. இது கடைசி வரை நடக்கவில்லை. பதவியைப் பறிக்கலாம் என்று குழு சொன்னதாம். பறித்துவிட்டார்கள். அவ்வளவுதான் விசாரணை நாடகம்.

"குழுவின் தலைவர் வினோத் சோன்கர், என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய விரிவான கேள்வியை, தனிப்பட்ட கேள்விகளைக் கேட்டார். அந்தக் கேள்விகள் என் உடைகளைப் பறிப்பதற்குச் சற்றும் குறைவானவை அல்ல. அதேநேரத்தில் விசாரணையின் போது இரண்டு பா.ஜ.க. எம்.பி.கள் அங்குதான் இருந்தார்கள். அவர்களுக்கு நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன்" என்று மஹுவா சொல்லி இருந்தார். ஒன்றிய அரசும் பா.ஜ.க. தலைமையும் வெட்கத்தால் தலை குனிய வேண்டாமா?

"எனக்கு 49 வயது ஆகிறது. இன்னும் 30 ஆண்டுகளுக்கு நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் பா.ஜ.க.வுடன் மோதுவேன். எந்தப் பின்புலமும் இல்லாமல் அரசியலுக்கு வந்த ஒரு பெண் எம்.பி.யை அடிபணிய வைக்க எவ்வளவு தொல்லைதான் தருவீர்கள்? பெண் சக்தி என்ன என்று காட்டுவேன்" என்று மஹுவா சொல்லி இருப்பது சர்வாதிகாரத்துக்கு எதிரான ஜனநாயகக் குரலாக இருக்கிறது.

பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வந்து விட்டதாக மார்தட்டிக் கொள்ளும் பா.ஜ.க., ஒரு எதிர்கட்சி எம்.பி.யை பதவி நீக்கம் செய்வதற்காக அவரது தனிப்பட்ட வாழ்க்கையைக் கேள்வி கேட்டு துரத்தி அடிக்குமானால் மக்களால் துரத்தி அடிக்கப்பட வேண்டாமா பா.ஜ.க.?

தமிழ்நாடு அரசின் சார்பில், நேற்று (10.12.2023) மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை பாரிமுனை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு

இன்னும் ஒரு வாரத்தில் ரூ. 6 ஆயிரம் வழங்கத் தொடங்கி விடுவோம்!

சென்னை - மவுலிவாக்கத்தில் நிவாரணம் வழங்கி - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

சென்னை, டிச.11-

சென்னையை அடுத்த மவுலிவாக்கத்தில் மழையால் பாதித்தவர்களுக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஏற்பாட்டில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 600 பேர்களுக்கு அரிசி, மளிகைப் பொருட்களை நேற்று வழங்கினார். அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அதன் விவரம் வருமாறு:

கேள்வி: சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை எப்போது வழங்கப்படும்?

உதயநிதி ஸ்டாலின்: இன்னும் ஒரு வாரத்தில் வெள்ள நிவாரணம் வழங்கத் தொடங்கி விடுவோம். முதலில் அதற்கான டோக்கனை கொடுக்க வேண்டும். சில இடங்களில் ரேஷன் கடைகளில் தண்ணீர் புகுந்தது. அங்கிருந்த பொருட்களும் சேதம் அடைந்தது. அதை சரி செய்த பிறகு ஒரு வாரத்தில் பொதுமக்களுக்கு டோக்கன் வழங்கப்படும். அதன் பிறகு வெள்ள

நிவாரண நிதி வழங்கப்படும்.

கேள்வி: சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள் அமைத்தது தொடர்பாக வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கோரிக்கை வைக்கிறார்களே?

உதயநிதி ஸ்டாலின்: எதிர்க்கட்சிகள் அப்படி சொல்லிக்கொண்டு தான் இருப்பார்கள். நாம் நமது வேலையைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும்.

கேள்வி: சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள் திருப்புகழ் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அமைக்கவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்து உள்ளதே?

உதயநிதி ஸ்டாலின்: அப்படி அமைத்ததால் தான் இவ்வளவு மழை பெய்தும் 3 நாளில் மழைநீர் வடிந்து மின் சாரம் வந்துள்ளது. இல்லாவிட்டால் நிலைமை இன்னும் மோசமாகி இருக்கும்.

கேள்வி: மழைச் சேதத்தைப் பார்வையிட வரும் மத்தியக் குழுவிடம் என்னென்ன விஷயங்களை வலியுறுத்த இருக்கிறீர்கள்?

உதயநிதி ஸ்டாலின்: ஏற்கெனவே ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வந்து வெள்ளச் சேதத்தைப் பார்வையிட்டார். அவரிடம் எவ்வளவு பெரிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது என்று முதலமைச்சர் விளக்கிக் கூறியுள்ளார். தற்போது முதல் கட்ட நிதி கொடுத்து இருக்கிறார்கள். விரைவில் அடுத்த கட்ட நிதியைக் கொடுப்பார்கள் என்று நம்புகிறோம்.

கேள்வி: சென்னையில் வெள்ளம் பாதித்த ஒரு சில இடங்களில் கவுன்சிலர்கள் வந்து ஆய்வு செய்யவில்லை என்று பொதுமக்கள் குற்றம் சாட்டுகிறார்களே?

உதயநிதி ஸ்டாலின்: அனைத்து இடங்களிலும் அமைச்சர்கள், கவுன்சிலர்கள் ஆய்வு செய்துள்ளனர். மக்கள் மத்தியில் சின்ன அதிருப்தி இருக்கத்தான் செய்யும். இவ்வளவு மழை பெய்ததை யாரும் எதிர்பார்க்கவில்லை. இது கடந்த 50 வருடங்களில் பெய்யாத மழையாகும். ஓரளவுக்கு என்னென்ன செய்ய முடியுமோ அதை களத்தில் இருந்து செய்து இருக்கிறோம்.

முதலமைச்சர், மேயர், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், கவுன்சிலர்கள் எல்லோருமே களத்துக்கு வந்தனர். தன்னார்வலர்கள்கூட களத்துக்கு வந்துள்ளனர். யாரையும் நான் குறை சொல்லவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

முதல்வர் அறிவித்துள்ள

ரூ.6 ஆயிரம் நிச்சயம் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்!

ஓட்டேரியில் நிவாரண உதவிகள் வழங்கிய கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

சென்னை, டிச.11-

முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் அரசும், மாநகராட்சி நிர்வாகமும் மழைநீர் வெளியேற்றுதல், உணவு மற்றும் நிவாரண உதவிகள் வழங்குதல், நோய் தொற்று பரவாமல் தடுக்க மருத்துவ முகாம்கள் அமைத்தல் போன்ற பணிகளை துரிதமாக மேற்கொண்டதனால் இயல்பு நிலை திரும்பியுள்ளது. அந்த வகையில் திரு.வி.க. நகர் மண்டலம், 75வது வார்டை சேர்ந்த ஓட்டேரி, செல்லப்ப

முதலியார் தெருவில் நேற்று (10.12.2023) நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 1,000 குடும்பங்களுக்கு அரிசி, பால், மளிகை பொருட்கள், போர்வை, பிரட், பிஸ்கட்கள், குடிநீர் உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கினர்.

பின்னர் கனிமொழி கருணாநிதி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

எதிர்பாராத அதிகன மழையால் பல பகுதிகளில் மக்கள் சிலர் பாதிப்பை சந்தித்தனர். மிகப்பெரிய பாதிப்பை சந்தித்து இருக்கக் கூடிய மக்களுக்கு நிச்சயமாக முதல்வர் அவர்களின் ரூபாய் 6000 நிவாரணம் பயனுள்ளதாகவும், அடிப்படை விஷயங்களை மறுபடியும் பெற்றுக் கொள்வதற்காகவும், பிள்ளைகளுக்கு புத்தகங்கள் வாங்க உள்ளிட்ட பல்வேறு விஷயங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். எதிர்க்கட்சித் தலைவர்கள் விமர்சனம் செய்வதை செய்து கொண்டிருக்கிறார்கள், களத்தில் இறங்கி வேலை செய்பவர்கள் வேலை செய்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

திருமதி மஹுவா மொய்த்ராவின் பதவி நீக்கம் தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கையில், ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி அவர்களை அழைத்து பேசக் கூட அவகாசம் தராமல், எத்திக்ஸ் கமிட்டியில் மிகக் கேவலமான கேள்விகளை கேட்டது மட்டும் இல்லாமல், அந்த கமிட்டியே நியாயம் இல்லாமல் நடந்து கொண்டது, அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக மக்கள் பிரதிநிதி ஒருவரை எந்த ஒரு சரியான விசாரணை இல்லாமல் அவர்களை பதவி நீக்கம் செய்திருப்பது அதிகாரத்தை பறிப்பது என்பது அடிப்படை அரசியல் சாசனத்திற்கு எதிரான ஒன்று.

ஒரு அரசாங்கம் என்பது கேள்வி கேட்பவர்களுக்கு பதில் சொல்ல வேண்டும். அதை விட்டு விட்டு கேள்வி கேட்பவர்கள் மீது கணைகளைத் தொடுப்பது அவர்களுடைய அரசியல் பதவிகளைப் பறிப்பது, ஊடகத்துறையை மிரட்டுவது நிச்சயமாக ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை உள்ள எந்த அரசாங்கமும் செய்யக்கூடாது என்று தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சுவாமிநாதன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட துறைமுகம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட மாநகராட்சி, 59வது வார்டை சேர்ந்த டி.என்பி.எஸ்.சி சாலை, நாராயணப்பா சாலை, என்.சி.போஸ் சாலை, தேவராஜ் முதலியார் தெரு, மெமோரியல் ஹால் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 3,000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித்தொகைளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மாநகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி தமிழ்ச்செல்வி சசிகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - திரு.வி.க.நகர்

தொகுதிக்கு அனுப்பி வைத்த நிவாரணப் பொருட்கள்!

ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, டிச.11-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்கு வழங்கிய நிவாரண பொருட்களை கழக துணை அமைப்புச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி வழங்கினார்.

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நியூபேரன்ஸ் சாலை 1வதுதெரு, ஸ்டாரன்ஸ் ரோடு 1வது தெரு, கெனால் சந்து, பழைய வாழை மாநகர், மற்றும் அந்த வட்டத்தில் உள்ள திருநங்கைகளுக்கு புயல் மழையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் ஏற்பாடு செய்து அனுப்பி வைக்கப்பட்ட புயல் மழை நிவாரண பொருட்களை கழக துணை அமைப்பு செயலாளரும் திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. வார்டு எண் 73 ல் உள்ள மழையால் பாதிக்கப்பட்ட பழைய வாழை மாநகர்,ஸ்டாரன்ஸ் ரோடு 1வது தெரு, கெனால் சந்து, நியூ போரன்ஸ் ரோடு 1வது தெரு, மற்றும் அந்தப்பகுதியில் உள்ள திருநங்கைகளுக்கு நேரில் சென்று வீடு வீடாக வழங்கினார்.

இந்நிகழ்வில் திரு.வி.க. நகர் தெற்கு பகுதி செயலாளர் எம். சாமிக்கண்ணு, 73 வது வட்டச் செயலாளர் தமீம்பாய், துணைச்செயலாளர் மூவேந்தன், வட்ட அவைத்தலைவர் கிருஷ்ணா, நல்லத்தம்பி,ராஜ்குமார்,எத்திராஜ், பகுதிபிரதிநிதிகள் அப்பு,சசிகலா,குலாப், மகளிரணி தனலட்சுமி, ஐடி விங் கௌதம், வட்ட துணைச் செயலாளர் சுரேந்திரன், வாழை மாநகர் குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகள், கோவிந்தராஜ், சந்திரபாபு, துரை விசிக திலகராஜ், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (10.12.2023) திரு.வி.க. நகர் மண்டலம், 75வது வார்டு, சென்னை, ஓட்டேரி செல்லப்பா தெருவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த 1000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினர். உடன் திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மாமன்ற உறுப்பினர் திருமதி.தமிழ்ச்செல்வி சசிகுமார் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளனர்.